அசல் வழக்குஎண்.193/2022 வா.சா.1 பூவேல் த/பெ பாலசுந்தரம்

**27.06.2024 குறுக்கு விசாரணை தொடர்ச்சி....**

9. எனக்கு 2001ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். இதற்கு முன்னர் நான் சென்னையில் வேலை செய்து வந்தேன் என்றால் கூலிக்கு எங்கு அழைத்தாலும்வேலைக்கு செல்வேன். நான் என் மாமியார் வீட்டில்தான் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வேலை கிடைக்கும் இடங்களில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

10., லாடவரத்தில் என்அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை செல்வி அம்மாளுக்கு 24.12.1999ல் கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு செல்வி அம்மாளுக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து தான் தாவா 8வது அயிட்ட சொத்து என்றால் தெரியாது. அவ்வாறு கிரயம் வாங்கிய செல்வி அம்மாளை இந்த வாக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் அவ்வாறு அவர் சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தினால் இந்த வழக்கு தவறானது என்றால் சரியல்ல.

11. என் அப்பா பாலசுந்தரம், சித்தப்பா அண்ணாமலை மற்றும் முனியாண்டி ஆகிய மூவரும் சேர்ந்து 04.06.2004 அன்று தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ராஜாமணி அம்மாள் என்பவருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயம் கொடுக்கப்பட்ட அந்த சொத்தினையும், கிரயம் வாங்கிய ராஜாமணி அம்மாளையும் இந்த வழக்கில் வழக்கு சொத்தாகவும் தரப்பினராகவும் சேர்க்கவில்லை என்றும் அவ்வாறு சேர்க்கப் படவில்லை என்ற காரணத்தினால் இந்த வழக்கு தவறானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

12. என்அப்பா 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ3 முன்னிலைக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தினை மகேந்திரா ரூரல் அவுசிங் சொசைட்டியில் 05.02.2015ல் ரூ.1,00,000/-த்திற்கு அடமானம் போட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த அடமானக்கடனை 02.12.2021 அன்று பைசல் செய்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

13.அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் எழுதி வைக்கப்பட்ட சொத்தினை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.4 முன்னிலைக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா சொத்தினை அவர் எப்படி தான செட்டில்மெனட் பத்திரம் எழுத முடியும்.

14. அவ்வாறு தானசெட்டில்மென்ட் எழுதப்பட்ட சொத்தின பட்டா மணிகண்டன் பெயரில்தான் தற்போதும் இருந்துவருகிறது என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. மணிகண்டனை யும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் ஆனால் அவர் குறித்த ஆவணங் களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15. எனக்கு 2 சகோதரிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பா உடல்நிலை சரியில்லா மல் படுத்தபடுக்கையாக இருந்ததால் 1ம் பிரதிவாதி தான் 2 சகோதரிகளின் திருமணத்தையும் முன்னின்று செலவு செய்து வைத்தார் என்றால் சரியல்ல. அதேபோல் எனக்கும் 1ம் பிரதிவாதி தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல.

16. என் சின்ன தாத்தா மகன்களான சண்முகம், பிச்சாண்டி, பிச்சாண்டி மனைவி பார்வதி ஆகியோர்கள் மீது என் தந்தை பாலசுந்தரம், மற்றும் 1ம் பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆரணியில் அசல் வழக்கு எண்.12/2006 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்தவழக்கு 25.03.2013 அன்று பாலசுந்தரம் மற்றும்

1ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீா்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு செலவையும் 1ம் பிரதிவாதி தான் செய்தாா் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது.

17. என் திருமணம், என் சகோதரிகளின் திருமணம் வழக்கு செலவுகள் ஆகிவற்றை 1ம் பிரதிவாதி செய்து வந்ததால் தான் என்அப்பா பாலசுந்தரம் 1ம் பிரதிவாதியின் மீது தான செட்டில்மன்ட் பத்திரம் எழுதி வைத்தாா் என்றால் அவைஅனைத்தும் பொய் ஆகும்.

18. நான் படிக்கும் வயதில் குடும்பத்துடன் இணக்கமாக இல்லை என்று சொன்னால் நான் அப்போது படித்து விட்டு வேலைக்கு சென்று விட்டேன். நான் பிச்சாண்டி மனைவி பாா்வதியிடம் எவ்வளவு கடன் வாங்கி உள்ளேன் என்றால் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் பிச்சாண்டி மனைவி பாா்வதியிடம் பணம் பெற்று கொண்டு அவருடைய தூண்டுதலினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சண்முகம், பாா்வதி, மற்றும் பிச்சாண்டி ஆகியோரை எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரவங்களும் தெரியும் என்றும் ஆனால் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .

19. இந்த வழக்கில் 2 மற்றும் 3ம் வாதிகளான என் சகோதரிகளுக்கு இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியும் அவா்கள் சாட்சியம் அளிக்க வருவாா்களா என்றால் வருவாா்கள். என் சகோதரிகளுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியாது என்றும் ஆனால் நான் அவா்களின் கையெழுத்துக்களை நானே செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3ம் வாதிகளை இந்த வழக்கை நிரூபிக்க நான்தான் வரவழைக்க வேண்டுமென்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்றும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள பிரச்சினை காரணமாக 2ம் பிரதிவாதியான சாா் பதிவாளா், ஆரணியை இந்த வழக்கில் தேவையில்லாமல் தரப்பினராக சோ்த்துள்ளேன் என்றும் அந்த காரணத்தினால் இந்த வழக்கு 2ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.